# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்: 04 கணை: 27 ஆகஸ்ட் 2023





**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...**

குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

பிரதம ஆசிரியர்
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

இணை ஆசிரியர்
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

தொழில்நுட்பமும் பசுமை எண்ணக்கருவும்
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

தொழில்நுட்பமும் ஆக்க வடிவமைப்பும்
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

நூலறிதலும் மேம்பாடும்
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

கதைக்களம்
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

காண்பியப் பொறுப்பு
திரு. கே.ஆர்.கமலநாதன்

வெளியீடு
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
guruseththiram@gmail.com

# உள்ளே...


1 ஆசிரியர் உள்ளத்திலிருந்து...
2 காட்சியும் கருத்தும்
3 கூட்டுறவுக் கற்றல் (பகுதி 2)
5 Science and Religion
8 “இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 18
9 மென்திறன்
10 21 ஆம் நூற்றாண்டின் பாடசாலைகள் (பகுதி 2)
13 யார் இந்த அசானி?
14 தலைமைத்துவம்
15 தமிழும் தமிழரும்...
16 மாற்றத்திற்கான சிந்தனை – 01
17 வாழ்க்கையின் தத்துவம்
19 பாக்கு நீரிணையை நீந்தி கடந்த ஈழத்தமிழன் ஆழிக்குமரன் ஆனந்தன்
20 வாசகர் உள்ளத்திலிருந்து...
21 பேசும் படங்கள்...!

குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!

**குருசேத்திரம்**

**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...**

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...




குருசேத்திரம் கணை 27 சஞ்சிகைக்கான ஆசிரியர் தலையங்கத்தை எழுதுவதில் அகமகிழ்வடைகின்றேன். இம் மாதத்திற்கான ஆசிரியர் தலையங்கம் ஒருவர் வெற்றியை அல்லது சாதனையை நோக்கியே பயணிக்கின்றார் என்பதைப் பிரதிபலித்து நிற்கும் விடயங்கள் குறித்து உங்களுக்கு விழிப்பூட்டுவதே எனது இலக்காகும்.

இந்தப் பிரபஞ்சத்தில் நீங்கள் ஒரு செயலை ஆற்ற முற்படும் போது பலவிதமான கஷ்டங்கள் தோன்ற வேண்டும். அவ்வாறு கஷ்டங்கள், தடங்கல்களை நீங்கள் சந்திகின்றீர்கள் என்றால் மனதினுள்ளே ஆனந்தம் கொள்ளுங்கள். ஏனெனில் கஷ்டப்படாமல் வாழ்வில் நீங்கள் அடையும் எந்த விடயமும் வாழ்நாள் முழுவதும் உங்களுடன் நிலைத்திருக்கும் என்பது மாயையே.

இங்கு கஷ்டம் என்பதற்குள் அடங்கும் பிரதான நிலைமைகள் எமது செய்கைகளுக்கு பிறர் செய்யும் ஏளனங்களும் அவர்கள் காட்டும் எதிர்ப்புகளும்தான். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பலர் ஏளனம் செய்தும் எதிர்ப்பும் தெரிவித்தால் உங்கள் உங்கள் தெய்வங்களை நொந்து கொள்ளாமல் நன்றி கூறுங்கள். ஏனெனில் அப்போதுதான் உங்கள் இலக்கிற்கு அருகில் சென்று கொண்டிருக்கின்றீர்கள் என்பது வெளிப்படுகிறது.

பிறரின் ஏளனங்கள் எதிர்ப்புகளை சந்தித்து 27 வருட சிறை வாழ்வினை அனுபவித்த உலகின் சிறந்த ஆளுமையான நெல்சன் மன்டேலா கூறுகின்றார். **“விழாமலே வாழ்ந்தோம் என்பதல்ல, விழும் ஒவ்வொரு முறையும் மீண்டு எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை”.** ஆம், நிச்சயமாக இது அவருடைய அனுபவ வெளிப்பாடே, ஏனெனில் பலரின் ஏளனங்கள், எதிர்ப்புகளைக் கண்டு துவண்டு விடாமல் இது தான் தன் சாதனைக்கான பயணம் என அறிந்து செயற்பட்டு கறுப்பின மக்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்த மாமனிதன் அல்லவா அவர்.

ஆகவே சமூகத்திற்கு நல்ல முன்மாதிரிகளாகத் திகழ வேண்டிய மாணவ ஆசிரியர்களாகிய நீங்கள் பிறரின் ஏளனங்களும் எதிர்ப்புகளுமே உங்கள் செயல்களுக்கான அங்கீகாரம் என்பதை நன்குணர்ந்து பல சாதனைகளைப் புரிய வேண்டும். அதன்படியே இத்தகைய மனப்பாங்குள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்க உழைத்திட வேண்டும் என அன்புடன் கூறி எனது ஆசிரியர் தலையங்கத்தை நிறைவு செய்கின்றேன்.

**“Never Ever Give - up”**

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

# காட்சியும் கருத்தும்

திரு. சு. பரமானந்தம்




**“குருசேத்திரம்”** மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.

**குருசேத்திரம் உங்களின் களம்...**

அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

✉ guruseththiram@gmail.com

# கூட்டுறவுக் கற்றல்

2

## (Cooperative Learning)

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




*கூட்டுறவுக் கற்றல் குழுக்களில் மாணவர்களை ஒழுங்கமைப்பு மற்றும் செயற்படுத்தல் மூலமாக மாணவரின் அடைவுமட்டமானது சாதாரண கற்றல் செயன்முறையை விட 28 சதவிகிதம் வரை அதிகமாகக் காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டள்ளது.*

(மார்சானோ, பிக்கரிங் மற்றும் பொல்லாக் 2001)

### 4.0 கூட்டுறவு கற்றலின் முக்கியத்துவம்.

பரஸ்பர ஒத்துழைப்பு இடைவினை, குழும மற்றும் தனிப்பட்ட கற்றல் அடைவுகள் போன்றன சகபாடிகளுடனான வினைத்திறன் உள்ள தொடர்பாடல், பேரறிகைச் செயற்பாடுகள், உள ஆரோக்கியம் மற்றும் சுயமரியாதை (ஜான்சன் மற்றும் ஜான்சன் 1989) ஆகியவற்றின் செயல்முறைகளில் தங்கியுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கூட்டுறவு கற்றல் செயன்முறைகள் சிறப்பாக செயல் படுத்தப்படும் போது, கற்றல் அடைவு, மாணவர் இடைவினைக் கலந்துரையாடல், செயலுறு நிலையில் கற்றல், மாணவர் களின் தன்நம்பிக்கை மற்றும் சுய உந்துதல் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. சகபாடிகளுடன் ஒத்துழைக்கும் போது மாணவர்கள் உருவாக்கும் திறன்களும், சுயமாக பணிபுரியும் போது மாணவர்கள் உருவாக்கும் திறன்களும் ஒன்றிலிருந்து மற்றையது வேறுபடுகின்றது. அதிகமான கற்றல் பேறுகள், மாணவர்களை அணிகள் மற்றும் பணிக்குழுக்களாக ஒழுங்க மைக்கும்போது, ஒரு குழு அல்லது அணி பங்குபற்றுனராக இருக்க வேண்டிய திறன்கள் (கருத்துக்களை வாய்மொழி யாகக் கூறுவது மற்றும் நியாயப்படுத்துதல், சவால்களைக் கையாளுதல், ஒத்துழைத்தல், ஒருமித்த கருத்தை உருவாக் குதல் மற்றும் பணிவுடன் விட்டுக்கொடுத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்) ஆகியவை மிகவும் பயனுள்ளதாகவும் மாறி மாணவர்களிடையேயும் ஆசிரியரிடத்திலேயும் சமூகத் திறன்களை ஏற்படுத்துகின்றது.

கற்றல் கற்பித்தல் செயன்முறைகளுக்கு கூட்டுறவு குழும உத்திகளைப் பயன்படுத்துவது மாணவர்களுக்கு ஒருவருக் கொருவர் திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் எதிர்கால

வாழ்க்கையில் வெற்றி பெற உதவும் சமூகத்திறன்களும், உண்மையான அனுபவங்களையும் பயிற்சிப்படுத்துவதற்கு சந்தப்பங்களை வழங்குகிறது.

## 5.0 நீங்கள் அதை எவ்வாறு செய்ய முடியும்?

### 5.1 குழுமங்களில் அல்லது அணிகளில் பணியாற்றுதல்:

சிறிய குழுக்களாக அல்லது அணியாக மாணவர்கள் இணைந்து பணியாற்றத் தெரியாத வகுப்பறைகளில், குறுகிய, மிகவும் கட்டமைக்கப்பட்ட சிறு சிறு இலக்குகளை அல்லது கற்றல் பேறுகளைக் கொண்ட செயல்பாடுகளுடன் குழுமச் செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம்.

வெற்றிகரமான கூட்டுறவு குழுமச் செயற்பாடுகளும் அணிச் செயற்பாடுகளும், மாணவர்கள் ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல், ஒருவருக்கொருவர் செவிசாய்த்தல், பரஸ்பர புரிந்துணர்வு, தங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் அளவு, ஆசிரியரின் வழிப்படுத்தல் மற்றும் அருகிருந்து வழிகாட்டுதல், மாணவரின் செயற்பாடுகளுக்கு கிடைக்கும் அக மற்றும் புறத்தூண்டல்கள் ஆகிய விடயங்களில் தங்கியுள்ளது.

குழுமங்களில் பணியாற்றத் தேவையான திறன்களைக் கற்றுக் கொள்ளவும் பயிற்சிப்படுத்தவும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவ வேண்டும், பாடத்தில் அல்லது செயன்முறையில் விருப்புநிலையை ஏற்படுத்தக்கூடிய தர விருத்தி உள்ளீடுகளை ஆசிரியர்கள் தயாரித்து, மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட குறுகிய, படிமுறை ரீதியாக கட்டமைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்துதல் மற்றும் குழு உறுப்பினர் களின் பங்களிப்பு, ஈடுபாடு, வகிபாகங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகளை தெளிவுபடுத்துதல் போன்ற ஆசிரியர் சார்பான செயற்பாடுகள் கூட்டுறவுக் கற்றலை வினைத்திறனும், விளைதிறனுமுள்ளதாக மாற்றும்.



கூட்டுறவு குழுமங்களை, வகுப்பறையில் செயற்பட அனுமதிக்கும் போது ஆசிரியர் தனது திட்டமிடலுக்கு ஏற்ப ஒரு குழு தனது செயன்முறைகளின் அனுபவத்தை முன்வைக்கும் (முன்வைப்பில் பல்வகைமை அவசியம்) போது மற்றைய குழு அங்கத்தவர்கள் அதனை உன்னிப்பாக செவிமடுத்து, அர்த்தமுள்ள கருத்தாடல்களை ஏற்படுத் தக்கூடிய வகையில் தலையீட்டு வினாக்களை, ஐய வினாக்களை, அல்லது மீள வலியுறுத்தல் வினாக்களை கேட்டு கருத்தாடலை அர்த்தமுள்ளதாகவும் அறிவை முன்னைய அறிவின் மீது கட்டுமானம் செய்யக்கூடியதாக வசதிப்படுத்த வேண்டும்.

மாணவர்களுடன் கூட்டுறவு கற்றலைப் பயன்படுத்தத் தொடங்கும் போது, குழும விதிமுறைகளை வரையறை

செய்வதும், அவ் விதிமுறைகள் குழு உறுப்பினர்கள் எவ்வாறு இணைந்து செயல்படுதன்மையை எவ்வாறு மதிப்பிடப் படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் வழிகாட்டுதல்கள், அவதானிப்பு படிவம் அல்லது செவ்வைபார்க்கும் பட்டியல் அல்லது விதிகள். குழுக்களில் பணியாற்றுவதற்கான செல்நெறிகள், பாரம்பரிய வகுப்பறை செயல் முறைகளி லிருந்து மிகவும் வேறுபட்டவை என்பதை மாணவர்களுக்கு ஆசிரியர் தெரியப்படுத்துவதுடன் அதற்கான முன்னாயத்தச் செயற்பாடுகளில் ஆசிரியர் தனது முழுமையான பங்களிப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் அவசியமாகும்.

உதாரணமாக, ஒரு பாரம்பரிய வகுப்பறையில், மாணவர்கள் தங்கள் சொந்த வேலையை (இலக்கை) முடிக்கிறார்கள். கூட்டுறவு வகுப்பறைகளில், மாணவர்கள் மற்றவர்களுடன் இணைந்து தத்தமது பணிகளை முடிக்கி றார்கள். குழுமப் செயற்பாடுகளின் போது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைப் பற்றியும், மென்திறன்கள் பற்றியும் அவ்வப்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தெளிவு படுத்துவது மிக அவசியமான செயன்முறையாகக் கொள்ளப் படுகின்றது.

வகுப்பறைச் செயற்பாட்டுக்கான குழும விதிமுறைகள், அறிவுறுத்தல்கள், தரவிருத்தி உள்ளீடுகள், முன்வைப்பு முறைகள் மற்றும் மதிப்பீட்டு முறைகளும் நன்கு திட்டமிட்டு படிமுறையில் வடிவமைக்கப்பட்டிருந்தால், வகுப்பறைச் சூழமைவு ஒரு உயிரோட்டமான, சுதந்திரமான செயற்பாடு களைக் கொண்ட கட்டுருவாக்க வகுப்பறையாகப் பரிணமிக்கும்.

தொடரும்...

# Science and Religion

**- G.Vinitha Mathumitha - Maths English Medium –**



Science and religion are two different matters known to create controversy on their own or when mentioned together in certain situations. There are elements of science that may change and evolve overtime, but elements of religion stay the same for years through tradition and personal beliefs. Do people believe one is better than the other? It may be difficult to compare them since each has their own definition and how people perceive each, but each is known to influence concepts and beliefs of the other that affect how people view the world and live their lives.

Scientific elements such as nature or technology may influence what people believe related to religion. For example, people may use the stars or the planets when thinking about astrology. People don't have the ability to create stars or planets, but many relate their creation to a high power or God. Aside from that, science may include learning about these things, but some religions refer to stars or planets in a way with spiritual meaning. Elements of nature may also have similar meanings based on what a person beliefs if in connection to a specific religion being practiced.


Religious beliefs may play a role in how science is used to develop concepts used in society. People with specific religious beliefs may or may not use resources inspired by science. Some choose to live a life without high-tech devices or omit certain foods made with scientific advances. Others may embrace different types of religion and incorporate it in their lives to create a better lifestyle. The lifestyle may be a reflection of what they believe based on the religion they are practicing. Sometimes it's not a religion being practiced, but an element that was taken from or inspired by a certain religious belief people latch on to such as a curse or an action considered sacred.

Some situations have both subjects against each other with one having more preference than the other. For example, medical science concepts such as stem cell research have helped us learn more about cell mutation and growth in humans and animals. Yet, many are against projects related to this concept because of religious beliefs. Some feel you shouldn't interfere with a nature process or use a synthetic process to recreate something. Even if there are benefits many feel it is wrong simply because they believe such actions or human creation was not intended for that purpose.

Learning more about science and religion has helped grow different societies around the world. While they are two different subjects many feel it is necessary to keep them separate unless a beneficial factor of significance is present. Technology influences, society development, and medical research concepts are all areas that seem to put science against religion. Both areas continue to be explored and influenced by each other. Sometimes it is a matter of personal opinion while others feel moral objectives is being abused. Each concept has much to offer but how we interpret them is something that continues to evolve.

Science and religion are distinct ways of understanding the world. Science relies on empirical evidence and the scientific method to explain natural phenomena, while religion often involves faith, spiritual beliefs, and moral frameworks to make sense of existence and purpose. They can coexist, but they approach questions differently and often address different aspects of human experience.

## Differences between science and religion







- ❖ Scientific knowledge is derived from observation, experimentation, and analysis, while religious knowledge often stems from sacred texts, teachings, and divine inspiration.
- ❖ Science aims to understand the mechanisms and processes of the universe, while religion often addresses questions of meaning, purpose, and the human experience.
- ❖ Science and religion have historically clashed when their explanations have differed, but they can also coexist and complement each other when they address different aspects of life.
- ❖ Science relies on empirical observation, experimentation, and the scientific method to understand the natural world, while religion often relies on faith, revelation, and spiritual experiences.
- ❖ Science aims to explain natural phenomena through natural processes and laws, while religion seeks to explain existence, purpose, and moral values through divine or spiritual beliefs.
- ❖ Scientific theories can change based on new evidence and discoveries, while religious doctrines can be more resistant to change due to their foundational nature.
- ❖ Science focuses on the physical and natural aspects of the world, while religion often extends to metaphysical and transcendent realms.

## Similarities between science and religion

- ❖ Both science and religion aim to uncover deeper truths about the world and the universe, albeit through different methodologies.
- ❖ Both explore questions about the origins of existence, life, and the universe.
- ❖ Both provide a sense of community and belonging for their followers, fostering shared values and beliefs.
- ❖ Both offer moral and ethical guidance, influencing individuals' behaviors and choices.
- ❖ Both have evolved over time, adapting to new discoveries and cultural changes.
- ❖ Both delve into metaphysical concepts, such as purpose, meaning, and the nature of reality.
- ❖ Both seek to understand the relationship between humanity, the natural world, and potentially higher powers or forces.

*****

## கதைகளால் நியமாகி...

## வலி இல்லாத வசூல்

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தார். அவர் நிறைய உழைக்க வேண்டுமென்று திட்டமிட்டார். அவர் தனக்காக நிறைய சம்பாதிக்க வேண்டும் என்று விரும்பவில்லை. தனது நாட்டிற்காக சம்பாதிக்க வேண்டும் என்று விரும்பினார். அவரது திறைசேரியில் கையிருப்பு குறைவாக இருந்தது. மக்களிடம் வரி வசூலிக்க வேண்டும் வேறு வழி இல்லை. அவர் மக்கள் கஷ்டப்படக் கூடாது என்று நினைப்பவர்.



மக்கள் வரிகட்டவும் வேண்டும் சிரமப்படவும் கூடாது அதற்குத் தகுந்த மாதிரி திட்டம் போட்டார். இதற்காக மூன்று கிணறுகளை வெட்டினார். அது நிறைய நீர் நிரப்பினார். தேடிப்பிடித்து மூன்று குளங்களிலும் ஒவ்வொரு வகையான மீன்களை விட்டார்.

அந்த மீன்களுக்கு அபூர்வ சக்தி. அது எப்படி என்றால் அந்தக் குளத்தில் குளிக்கும் போது அந்த மீன்கள் கடிக்கும் போது வலி ஏற்படுவதில்லை. அதற்குப் பதிலாக மகிழ்ச்சி நிறைந்த ஒரு இனிமையான உணர்வை அளித்தன. அது எப்படி என்றால்,

முதல் குளத்தில் மீன் கடிக்கும் போது மக்களின் கால்கள் தரையில் படாமல் ஆகாயத்தில் மிதப்பது போல் உணர்வை அனுபவித்தனர். இரண்டாவது குளத்தில் மீன் கடிக்கும் போது ஒருவிதமான இன்ப மயக்கத்தில் திளைக்கின்ற மாதிரி உணர்வு. மூன்றாவது குளத்தில் குளிக்கும் போது தாங்கள் கோடிஸ்வரர்களாகிவிட்டதான உணர்வை அனுபவித்தனர். மன்னர் குளத்திற்கு அருகில் ஒரு அதிகாரியை அமர்த்தி வரி வசூலித்துக் கொண்டார். இன்றைக்கும் உலகில் உள்ள நாடுகள் இந்த குளத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வசூல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? மக்களுக்கு நலம் தெரியாமலும் வலி தெரியாமலும் வசூல் செய்வது நல்லது தானே என நினைப்பீர்கள்

ஆனால் இன்றைக்கும் பல அரசுகள் இதுபோல் மூன்று குளங்களை வெட்டி வைத்திருக்கிறார்கள். மக்களும் அந்த குளத்தில் வந்து குளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அது எப்படி என்று கேட்கிறீர்களா?

முதல் குளம் சாராயக் கடை இந்தக் குளத்தில் குளிப்பவர்கள் தான் கால்கள் தரையில் படாமல் ஆகாயத்தில் மிதப்பதைப் போன்ற உணர்வை அனுபவிக்கிறார்கள்.





இரண்டாவது குளம் தான் சினிமா தியேட்டர், தொலைக்காட்சி. இந்தக் குளத்தில் குளிப்பவர்கள் தான் ஒருவித மயக்கத்தில் திளைத்து இருக்கிற மாதிரியான உணர்வை அனுபவிக்கிறார்கள்.



மூன்றாவது குளம் லாட்டரி சீட்டு. இதில் குளிப் பவர்கள் தாமே கோடீஸ் வரர்கள் ஆகிவிட்டது போன்ற உணர்வை அனுபவிக்கிறார் கள். இன்றும் பல நாடுகள் இந்த குளங்களைப் பயன்படு த்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**நீதி : சுமை தெரியாத வலியும் வரியும் கூட வளர்ச்சியை பாதிக்கும்.**

## மென்திறன்

வன்திறனை ஆளும் மென் திறனாம்
வாழ்க்கைத்தினை கையாளும் திறனாம்
சமூகத்தைக் கட்டியெழுப்பும் புரிந்துணர்வாம்
சமாதானத்தை ஏற்படுத்தும் நல்லெண்ணமாம்

ஏட்டு அறிவைச் சாரா பொது அறிவை
ஏட்டு கல்வியூடாக வளர்த்திடுவோம்
நேர்மறையான நெகிழ்வான அணுகுமுறையை
நேரிலே சந்தித்து வென்றிடும்

ஆளுமை மிக்க ஆற்றல் வளர்ந்திட
ஆயிரம் சவால்களை வென்றிட
தன்னம்பிக்கையுடன் போராடிட
தடைகளை தாண்டிட மென்திறனாம்


எல்லோரும் இயங்கும் செயற்பாடுகளில்
எல்லா பொறுப்பு, தலைமையும் ஏற்றிட
தன்ம்பிக்கை கொண்ட தனித்துவத்துடன்
தலை நிமிர்ந்து நின்றிட மென்திறனாம்

வாண்மைத்துவ மேம்பாட்டின் வளர்ச்சிக்கும்
வாய்ப்புக்கள் கொண்ட களத்திற்கும்
படைப்பாற்றல் சிந்தனை கருவூலத்திற்கும்
பயிற்சி கொடுப்பதுவே மென்திறனாம்

***- Makenthirarasa Rupitha - Music course -***

# 21 ஆம் நூற்றாண்டின் பாடசாலைகள்

நா.அம்பிகைபாகன்
விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




## 9. ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு (Media and Information Literacy)

மாணவர்களை ஊடகம் மற்றும் தகவல் அறிவாற்றல் திறன்களுக்கூடாகக். ஊடகச் செய்திகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யவும், பகுப்பாய்வு செய்யவும், டிஜிட்டல் தகவல் மூலங்களுக்குச் செல்லவும், தகவல் பகிர்வு மற்றும் நிகழ்நிலைகற்றலுக்கான நடத்தை தொடர்பான நெறிமுறைக் கருத்துகளைப் புரிந்துகொள்ளவும் அவை மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன.

## 10. நெகிழ்வான கற்றல் இடங்கள் (Flexible Learning Spaces)

நெகிழ்வான மற்றும் மாற்றியமைக்கக்கூடிய கற்றல் இடங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றன. அவை ஒத்துழைப்பு, படைப்பாற்றல் மற்றும் வெவ்வேறு கற்றல் பாணிகளை ஆதரிக்கும் சூழல்களை வழங்குகின்றன. ஊடாடும் மற்றும் நெகிழ்வான கற்றல் அனுபவங்களை எளிதாக்குவதற்கு நகரக்கூடிய தளபாடங்கள், திறந்தவெளிகள் மற்றும் தொழில்நுட்பம் நிறைந்த பகுதிகளுடன் வகுப்பறைகள் வடிவமைக்கப்பட்டவை.

## 11. தொடர்ச்சியான வாண்மைத்துவ மேம்பாடு (Continuous Professional Development)

ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான தொழில்வாண்மை வளர்ச்சியின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றன. ஆசிரியர்களுக்கு அவர்களின் தொழில்நுட்பத் திறன், கற்பித்தல் திறன்கள் மற்றும் வளர்ந்துவரும் கல்விப் போக்குகள் பற்றிய அறிவை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான பயிற்சி, ஆதரவுடன் அதற்குத் தேவையான வளங்களையும் வழங்கப்படுகின்றன. தொழில்முறை கற்றல் சமூகங்கள் ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும் வளர்க்கப்படுகின்றன.

## 12. STEAM கல்வி (STEAM Education)

விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகியவற்றைக் குறிக்கும் STEAM கல்விக்கு வலுவான முக்கியத்துவம் கொடுக்கின்றன. இந்த துறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மாணவர்கள் இன்றைய சமுதாயத்தில் மிகவும் மதிப்புமிக்க படைப்பாற்றல், பிரச்சினைத் தீர்க்கும் மற்றும் புத்தாக்கம் போன்ற பல துறைசார் திறன்களை வளர்க்க உதவுகிறது.

### 13. உணர்ச்சி நுண்ணறிவு மற்றும் நல்வாழ்வு (Emotional Intelligence and Well-being)

மாணவர்களிடையே உணர்ச்சி நுண்ணறிவு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கின்றன. அவர்கள் சமூக-உணர்ச்சி கற்றலின் (social-emotional learning) முக்கியத்துவத்தை அங்கீகரித்து, சுயவிழிப்புணர்வு, பின்னடைவு மற்றும் நேர்மறையான மனஆரோக்கியத்தை வளர்ப்பதற்கான திட்டங்களையும் வளங்களையும் வழங்குகிற பாடசாலைகளாக் காணப்படுகின்றன

### 14. உண்மையான கணிப்பீடு (Authentic Assessment)

பாரம்பரிய கணிப்பீடு முறைகளிலிருந்து விலகி, உண்மையான கணிப்பீடு நடைமுறைகளைத் தழுவுகின்றன. செயல்திறன் அடிப்படையிலான கணிப்பீடுகள், செயலடைவுக் கோவை (Portfolios), செயற்திட்டங்கள், காட்சி முன்வைப்புக்கள் மற்றும் மாணவர்களின் நிஜ-உலகத் திறன்கள் (Real-world skills), அறிவைப் பயன்படுத்துதல் மற்றும் விமர்சன சிந்தனை திறன்களை கணிப்பிடும் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றை அமுல்ப்படுத்தும் பாடசாலைகளாகும்.

### 15. சமூக ஈடுபாடு (Community Engagement)

உள்ளூர் சமூகத்துடன் தீவிரமாக ஈடுபடுவதுடன் கற்றல் செயல்பாட்டில் வெளிப்புற பங்காளிகளை ஈடுபடுத்துகின்றன. உண்மையான கற்றல் அனுபவங்கள், வழிகாட்டல் வாய்ப்புகள் மற்றும் நிஜ உலகத்திற்கான இணைப்புகளை வழங்குவதற்கு அவர்கள் வணிகங்கள், நிறுவனங்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களுடன் ஒத்துழைக்கின்றனர்.

### 16. சுற்றுச்சூழல் உணர்வு (Environmental Consciousness)

சுற்றுச்சூழல் உணர்வு மற்றும் நிலைபேன்தகுதன்மையை ஊக்குவிக்கின்றன. அவர்கள் சுற்றுச்சூழல் கல்வியை பாடத்திட்டத்தில் ஒருங்கிணைத்து, பாடசாலைக்குள் சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகளை ஊக்குவித்து, சுற்றுச்சூழல் பொறுப்புள்ள குடிமக்களாகமாற மாணவர்களை மேம்படுத்துகிறார்கள்.

### 17. வாழ்நாள் முழுவதும் கற்றல் (Lifelong Learning)

மாணவர்களிடையே வாழ்நாள் முழுவதும் கற்றல் கலாசாரத்தை வளர்க்கின்றன. வேலையின் வளர்ச்சி மற்றும் வாழ்நாள் முழுவதும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு மாணவர்களைத் தயார்படுத்த, விமர்சன சிந்தனை, தகவமைப்பு மற்றும் தொடர்ச்சியான சுய-மேம்பாடு போன்ற அத்தியாவசியதிறன்களின் வளர்ச்சியை அவை வலியுறுத்துகின்றன.

### 18. டிஜிட்டல் குடியுரிமை (Digital Citizenship)

டிஜிட்டல் குடியுரிமை, நிகழ்நிலைப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத்தின் பொறுப்பான பயன்பாடு பற்றி மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன. அவை நெறிமுறை நடத்தை, டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் டிஜிட்டல் உலகத்தை பொறுப்புடனும் மரியாதையுடனும் வழிநடத்தும் திறனை ஊக்குவிக்கின்றன.

### 19. பெற்றோர் மற்றும் சமூக ஈடுபாடு (Parent and Community Involvement)

கல்விச் செயல்பாட்டில் பெற்றோர்களையும் பரந்த சமூகத்தையும் தீவிரமாக ஈடுபடுத்துகின்றன. அவர்கள் திறந்த தொடர்பு, வழக்கமான பெற்றோர்-ஆசிரியர் ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறார்கள், மேலும் சமூக உறுப்பினர்களுக்கு மாணவர் கற்றல் மற்றும் பாடசாலை முயற்சிகளுக்கு பங்களிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறார்கள்

### 20. சமபங்கு மற்றும் உள்ளடக்கம் (Equity and Inclusion)

சமபங்கு (Equity) மற்றும் உள்ளடக்கத்திற்கு முன்னுரிமை அளித்து, அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி மற்றும் வளங்களை சமமாக அணுகுவதை உறுதி செய்கிறது. பன்முகத்தன்மையைவளர்த்து, தங்கியிருக்கும் தன்மைகளை நிவர்த்தி செய்கிறார்கள், அனைத்து மாணவர்களின் தனித்துவமான பின்னணி மற்றும் முன்னோக்குகளை மதிக்கும் உள்ளடக்கிய கற்றல் சூழல்களை உருவாக்குகிறார்கள்.

### 21. தொடர்ச்சியான கண்டுபிடிப்பு (Continuous Innovation)

தொடர்ச்சியான கண்டுபிடிப்பு மற்றும் முன்னேற்றத்தின் கலாச்சாரத்தைத் தழுவுகின்றன. கற்பித்தல் மற்றும் கற்றல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான சமீபத்திய ஆராய்ச்சி, கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றுடன் புதுப்பித்த நிலையில் இருக்க ஆசிரியர்களை அதிபர்கள் ஊக்குவிக்கின்றனர்.

21 ஆம் நூற்றாண்டின் பாடசாலைகள் தொழில்நுட்பத்தைத் பின்பற்றுகின்றன, மாணவர்களை மையமாகக் கொண்ட மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட கற்றலை ஊக்குவிக்கின்றன, ஒத்துழைப்பு மற்றும் விமர்சன சிந்தனையை வலியுறுத்துகின்றன, உலகளாவிய மற்றும் கலாச்சாரத் திறனை வளர்க்கின்றன மற்றும் நவீன உலகின் சவால்களுக்கு மாணவர்களைத் தயார்படுத்துகின்றன. இந்த பள்ளிகள் 21 ஆம் நூற்றாண்டில் வெற்றிபெற தேவையான திறன்கள், அறிவு மற்றும் மனநிலையுடன் கூடிய நன்கு வட்டமான நபர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த குணாதிசயங்கள் மற்றும் கூறுகளை இணைத்து, 21 ஆம் நூற்றாண்டின் பள்ளிகள், ஆற்றல்மிக்க மற்றும் வேகமாக மாறிவரும் 21 ஆம் நூற்றாண்டு உலகில் செழிக்கத் தேவையான திறன்கள், மனநிலை மற்றும் திறன்களுடன் மாணவர்களை சித்தப்படுத்தும் பொருத்தமான, ஈடுபாடு மற்றும் முழுமையான கல்வியை வழங்க முயல்கின்றன.



முற்றும்

# யார் இந்த அசானி?




எழில் கொஞ்சும் இலங்கை திருநாட்டின் குறிஞ்சியின் மகளாய்,

கண்டி உடபுஸ்ஸல்லாவ, நயப்பனையின் விதை இவள்!

தாய் சத்தியபாமா தந்தை கனகராசாவின் மொத்த சொத்து இவள்!

இரண்டு சகோதரங்களுடன் பிறந்த தேவதை இவள்!

நாள் கூலியாக 500 ரூபா பெறுவதையே பெரிய வெற்றியாக நினைத்து,

எளிமையான வாழ்க்கையை கொண்ட,

தோட்ட தொழிலாளிகளின் ஒளி விளக்கு இவள்!

நயப்பனை தமிழ் வித்தியாலயத்தின் ஒன்பதாம் ஆண்டு மொட்டு இவள்!

பாடசாலையின் இன்னிசை குயில் இவள்!

வானொலி அலைகளை, தன் வாழ்க்கையை செதுக்கும் உளியாக மாற்றிக்கொண்டவள் இவள்!

குரலுக்கு அடிமையாகியது இவளின் ஊர், களம் கொடுத்தது ZEE தமிழ் மேடை,

உதவிக்கரம் நீட்டியது இளைஞர் மன்றம்!

ஒன்றரை இலட்சத்தில் ஆரம்பமாகியது இவளின் இசைப்பயணம்!

ஒட்டுமொத்த வம்சத்தின் கனவுகளுடன் மேடையில் இவள்!

சாமானியர்களை சாதனையாளர்களாக்கும் எத்தனையோ மேடைகள் இருக்கத்தான் செய்கின்றன!

மலையகம் 200 இல் அசானி எமக்கான அடையாளம்!

இன்னும் இலைமறை காயாக எத்தனையோ அசானி உங்கள் கண் முன்னே,

ஆசிரியர்களே விழித்திருங்கள்!

இலைமறைக்காய்களை கனிகளாக்க வழிசமையுங்கள்!

இப்படிக்கு,
குறிஞ்சியின் மகள்,
லோ.தினுஷா பிரியதர்ஷனி
விஞ்ஞானத்துறை



# தலைமைத்துவம் (Leadership)

## நாளைய தலைவர் நீங்கள்

தலைமைத்துவம் என்பது சிறந்தவராக இருப்பதற்காக அல்ல. எல்லோரையும் சிறந்தவர்களாக மாற்றுவதாகும். அந்த வகையிலே எந்த ஒரு மனிதனின் நடத்தை மற்றவர்களின் நடத்தையின் மாற்றத்தை தன்னில் ஏற்படுத்தும் மாற்றத்தை விட அதிகமாக ஏற்படுகின்றதோ அந்த நடத்தையே தலைமைத்துவம் ஆகும். ஒரு மனிதனுக்குத் தொழில் தொடங்க அல்லது ஒரு நிறுவனத்தை நடத்த அவனிடம் தலைமைத்துவப்பண்புகள் தேவை. ஒரு நல்ல தலைவனாக இருப்பதற்கு அத் தலைவனானவன் நல்ல குணாதிசயங்களைக் கொண்டிருக்க வேண்டும். அந்த வகையிலே தலைவனானவன் எப்பொழுதும் தைரியமானவராகவும், நேரத்தைக் கடைப்பிடிப்பவராகவும், கடின உழைப்பாளியாகவும் புத்திசாலித்தனம் மற்றும் நெகிழ்வுத்தன்மை உடையவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு தலைவர் ஆனவர் தனது தலைமைத்துவப் பண்புகளை பயன்படுத்தி அவரைப் பின்பற்றுவர்களை வழிநடத்துகிறார்.

அந்த வகையிலே நாம் ஏராளமான அறிஞர்கள் பெரியார்கள் விஞ்ஞானிகள் என பலரை எடுத்துக்காட்டுகின்றோம். ஆனால் நம்மவர்களில் ஏராளமானோர் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவர்களாக திகழ்கின்றார்கள் என்பதனை எடுத்துக்காட்ட பின்நிற்கின்றோம். உதாரணமாக எமது கல்லூரியின் பீடாதிபதி அவர்கள் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவராகத் திகழ்கின்றார் என்பதில் ஐயமில்லை. ஒரு தலைவரானவர் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதனை நாம் அவரிடத்தில் இருந்து சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்கின்றோம். கல்லூரியில் இடம் பெறுகின்ற நாளாந்த செயற்பாடுகளிலே கல்லூரிச் சூழலைச் சிறந்த முறையில் பேணுவதிலும் மாணவர்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறுவதிலும் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவதிலும் மாணவர்களின் நலன்களில் அக்கறை உள்ளவராகவும் காணப்படுகின்றார் அனைவரையும் சமமாக நடத்துவதிலும் எமது கல்லூரியின் பீடாதிபதி சிறந்த தலைமைத்துவப் பண்பு கொண்டவராகத் திகழ்கின்றார்.

ஒருவனின் எண்ணம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவன் உயர்வடைகின்றான். இதனையே,

**“வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு”**

என்கிறார் வள்ளுவர். உயர்ந்த எண்ணத்தை செயல்படுத்தினால்தான் வெற்றியடைய முடியும். அந்த உயர்ந்த எண்ணத்தை செயல்படுத்துவதற்குப் பலருடைய உதவிகள் தேவை. ஒரு தலைவன் என்பவன் தன்னுடைய இலட்சியத்தை அடைவதற்கு மற்றவர்களை ஒருங்கிணைத்து அவனுடைய இலட்சியத்தை மற்றவர்களும் தங்கள் இலட்சியமாகக் கொள்ளுமாறு அவர்களை ஊக்குவித்து அவர்களுடைய உதவியால் தன் இலட்சியத்தை அடையும் ஆற்றல் உடையவனாக இருக்க வேண்டும்.

பல்வேறு துறைகளுக்கு தலைமைத்துவமானது அவசியமான ஒன்றாகும். அந்த வகையிலே ஒரு விளையாட்டுத்துறை எனும் போது எந்த ஒரு குழு விளையாட்டிற்கும் தலைமைத்துவ திறன்கள் மிகவும் தேவையான விடயமாகும். எனவே ஒவ்வொரு குழுவிளையாட்டிலும் அணியை வழிநடத்த ஒரு தலைவன் தேர்ந்தெடுக்கப்படுகின்றான். தன் குணாதிசயத்தில் தலைமைத்துவப் பண்புகளை கொண்ட வீரன் அணியை வழிநடத்தும் வாய்ப்பைப் பெறுகின்றான். நிர்வாகத்தில் தலைமைத்துவம் எனும் போது ஒரு நிர்வாகத்தை நாம் கற்பனை செய்து பார்க்க முடியாது.திறமையான ஒரு நிர்வாகத்திற்கு தலைமைத்துவ திறன்கள் நிறைந்த நல்ல தலைவர் தேவை. திறமையான தலைவர் தனது தலை மைத்துவ பண்புகளால் ஒரு நிறுவனத்தை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல முடியும்.

குறித்த ஒரு சமூகம் கற்ற ஒரு மேதைக்குப் பின்னால் செல்வதை விட கல்வியோடு தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் கொண்ட ஒருவருக்கு பின்னாலேயே செல்வதை விரும்புகிறது. அதையே பாதுகாப்பானது எனவும் நம்புகிறது. அந்த வகையிலே பாடசாலைக் காலங்களிலேயே தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் ஆசிரியர்களாக வரப் போகும் நாம் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். அது மட்டுமல்லாமல் மாணவர்களிடையேயும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை ஏற்படுத்துவதற்கும் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கும் முன் வர வேண்டும்.

**- சி.தனுசா - ஆரம்பக்கல்வி -**

# தமிழும் தமிழரும்...

*தானியங்களை 9 ஆக பிரித்தான்*
*திசையை 8 ஆகப் பிரித்தான்*
*இசையை 7 ஆகப் பிரித்தான்*
*சுவையை 6 ஆக கொடுத்தான்*
*நிலத்தை 5 ஆகப் பிரித்தான்*
*காற்றை 4 ஆகப் பிரித்தான்*
*மொழியை 3 ஆகப் பிரித்தான்*
*வாழ்வை 2 ஆக வகுத்தான்*
*ஒழுக்கத்தை மட்டும் ஒன்றாக வைத்தான். அதை உயிரினும் மேலாக வைத்தான்.*
*- தமிழன்*

*தானியங்கள் : கோதுமை, நெல், துவரை, பாசிப்பயறு, கொண்டைக்கடலை, மொச்சை, எள், உளுந்து மற்றும் கொள்ளு*
*திசை : வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு*
*இசை : ச ரி க ம ப த நி*
*சுவை : இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, காரம், கசப்பு*
*நிலம் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை*
*காற்று : கோடை, வாடை, தென்றல், கொண்டல்*
*மொழி : இயல், இசை, நாடகம்*
*வாழ்வு : அகம், புறம்*

*தமிழ் வாழ்க!!*

# ஒப்பிட்டுப்பார் (பாராதே)

## Comparation

ஒப்பிட்டுப் பார்த்துக் கவலை கொள்வது இன்று பலரின் இயல்பாகவே மாறியுள்ளது. கவலையளிக்கிறதென்றாலே அந்த ஒப்பீடு தேவையற்றது அது விலக்க வேண்டியதென்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஒரு பிள்ளையை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் கலாசாரம் நன்றாகவே எம் சமூகத்தில் வேரூன்றி விட்டது. இதனை தெளிவாக அவதானிக்க முடிகிறது.

இந்த நிலைமை மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. எதனை எதனோடு ஒப்பிடவேண்டும் எதனோடு ஒப்பிடக் கூடாதென்ற புரிதல் எல்லோருக்கும் தேவை. ஒப்பிடுங்கள்

உங்கள் பிள்ளையை உங்கள் பிள்ளையோடு ஒப்பிடுங்கள். இன்னொரு பிள்ளையுடன் அல்ல.

உங்கள் பிள்ளையின் நேற்றைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிடுங்கள். உதாரணமாக உங்கள் பிள்ளை கடந்த முறை கணித பாடத்திற்கு 50 மதிப்பெண்கள் பெற்றுக் கொண்டாரென்றால் "இந்த முறை முன்னேற்றம் இருக்கிறதா?, 55 மதிப்பெண்ணுக்காவது முன்னேறி யிருக்கிறாரா?"

என்பதை ஒப்பிடுங்கள். அதற்கேற்ப நடவடிக்கை எடுங்கள்.

## மாற்றத்திற்கான சிந்தனை 01

எந்திரி.ச. சர்வராஜா
நீர்ப்பாசனப் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்
வடக்கு மாகாணம்

வெற்றி என்பதற்குரிய வரைவிலக்கணமே இவ்வாறுதான் அமைகிறது. இன்றைய அடைவு அல்லது பெறுபேறு நேற்றைய அடைவு அல்லது பெறுபேறை விட அதிகமாக இருந்தால் அதுவே வெற்றி. வகுப்பில் உச்ச புள்ளி 98 ஆக இருந்துவிட்டு போகட்டும்.

"தன்னோடு மட்டும் ஒப்பிட்டு சிறிது சிறிதாக நாளாந்தம் முன்னேற்றம் காண்பவன் எவனோ, அவன் அந்த விடயத்தின் உச்சம் எதுவோ அதனை ஒருநாள் அடைவான்" என்கிற ஆசான்ஜியின் கருத்து மிகவும் உன்னதமானது. அதுவே உண்மையானதும்.

மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து வீழ்ந்து விடமால் பிள்ளைகளை மற்றவர்களோடு ஒப்பிட்டு வீழ்த்தி விடாமல் வாழப் பழகுங்கள். உங்களை உங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து உச்சத்தை தொடும் வழி காணுங்கள். பிள்ளைகளையும் அவ்வண்ணம் வளப்படுத்துங்கள்.

> "I will not compare myself to anyone else because everyone is on their own personal journeys. My journey is unique and cannot be compared."

# வாழ்க்கையின் தத்துவம்




ஒரு கிராமத்தில் சிறுவன் ஒருவன் ஏரிக்கரையில் விளையாடிக் கொண்டு இருக்கிறான். அப்போது, “என்னை காப்பாற்று, காப்பாற்று“ என்று ஓர் அலறல். ஆற்றோரத் தண்ணீரில், வலைக்குள் சிக்கி இருக்கும் முதலை ஒன்று சிறுவனைப் பார்த்துப் பரிதாபமாக கதறுகிறது.

’மாட்டேன். உன்னை விடுவித்தால் என்னை விழுங்கி விடுவாய். காப்பாற்ற மாட்டேன்’ என மறுக்கிறான் சிறுவன். ஆனால் முதலை, “நான் உன்னை சத்தியமாகச் சாப்பிட மாட்டேன். என்னை காப்பாற்று’’ என்று கண்ணீர் விடுகிறது.

முதலையின் பேச்சை நம்பி, சிறுவனும் வலையை அறுக்க ஆரம்பிக்கிறான். அறுத்து முடிப்பதற்குள், சிறுவனின் காலைப் பிடித்துக் கொண்டது .

’’பாவி முதலையே இது நியாயமா? என்று சிறுவன் கண்ணீருடன் கேட்க,

“அதற்கென்ன செய்வது, பசி வந்தால் பத்தும் பறந்துவிடும். இதுதான் உலகம். இதுதான் வாழ்க்கை’’ என்று சொல்லிவிட்டு விழுங்க ஆரம்பித்தது முதலை.

சிறுவனுக்கு சாவது பற்றிக்கூட கவலை இல்லை. முதலை ஏமாற்றி விட்டதோடு மட்டும் அல்லாமல், நன்றிகெட்டதனத்தை, ’இதுதான் உலகம்’ என்று சொல்வதை அவனால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

மரத்திலிருந்த பறவைகளைப் பார்த்துக் கேட்டான். இதுதான் உலகமா?. அதற்கு பறவைகள், ’’எத்தனையோ பாதுகாப்பாக மரத்தின் உச்சியில் நாங்கள் முட்டையிடுகிறோம். ஆனாலும், பாம்புகள் முட்டைகளை குடித்து விடுகின்றன. அதனால், இதுதான் உலகம்’’ என்று சொல்கின்றன.

அங்கு மேய்ந்து கொண்டு இருக்கும் கழுதைகளைப் பார்த்து கேட்கின்றான். ’’நாங்கள் இளமையாக இருந்த காலத்தில் அதிகபடியான சுமைகளை சுமக்க செய்து, அடித்து, சக்கையாக வேலை வாங்குகிறார்கள். எங்களுக்கு வயதாகி, நடை தளர்ந்தவுடன், தீனி போட முடியாது என்று விரட்டிவிடுவதால், முதலை சொல்வது சரிதான்’’ என்கின்றன.

ஆடுகளை கேட்கிறான். ’’எங்களுக்கு இரை போட்டு வளர்ப்பவர்களே, எங்களை இரையாக்கி கொள்வதால், முதலை சொல்வது சரிதான்’’ என ஆமோதிக்கின்றன.

கடைசியாக ஒரு முயலைப் பார்த்துக் கேட்கின்றான். “இதுவல்ல உலகம். முதலை பிதற்றுகிறது” என முயல் சொல்ல, முதலைக்கு கோபம் வந்துவிடுகிறது.

‘சிறு முயல் உனக்கு என்ன தெரியும்?’ என்று முதலை சொல்லவும்,

’நீ பேசுவது சரியாக புரியவில்லை, தெளிவாக பேசு’ என்கிறது முயல்.

காலை விட்டால் சிறுவன் ஓடிவிடுவான் என்ற முதலையைப் பார்த்து, முயல் பெரிதாக சிரித்தது.

“உன் வாலை வைத்து அவனை அடித்து விடமுடியாதா? ஒரே அடியில் அவனை வீழ்த்திவிடமுடியும் உன்னால் என்றவுடன், கர்வத்துடன் காலை விட்டுவிட்டு, இதுதான் உலகம்” என பேச துவங்கியது முதலை.

முயல் சிறுவனைப் பார்த்து ‘நிற்காதே! ஓடிவிடு’ என்கிறது.

சிறுவன் ஓடிவிடுகிறான். வாலால் அடித்து விடலாம் என நினைத்த முதலைக்கு ஏமாற்றமாகப் போய்விடுகிறது, வலையில் சிக்கியிருக்கும் வால் பகுதியை விடுவிப்பதற்குள் சிறுவனை பிடித்தது நினைவுக்கு வருகிறது.

கோபத்துடன் முயலைப் பார்க்க, ”புரிந்ததா? இதுதான் உலகம். இதுதான் வாழ்க்கை” என்கிறது முயல்.

தப்பி ஓடிய சிறுவன் கிராமத்தினரை அழைத்துவர, அவர்கள் முதலையை கொன்றுவிடுகின்றனர்.

சிறுவனோடு வந்த வளர்ப்பு நாய், புத்திசாலி முயலை பாய்ந்து பிடிக்கிறது. சிறுவன் காப்பாற்றுவதற்குள் முயலை நாய் கொன்றுவிடுகிறது.

உயிராக வளர்த்த நாய்தான் என்றாலும், உயிரைக் காப்பாற்றிய முயலை கொன்றுவிட்டதைத் அவனால் சகித்துக் கொள்ளமுடியவில்லை.

கல்லெடுத்து எறிந்து நாயை விரட்டிவிடுகிறான்.

உதவி செய்தவர்களுக்கு உபத்திரவம் ஏற்படுவதும், நேசித்தவர்களையே வெறுக்க நேரிடுவதும் அவனை குழப்பிவிடுகிறது.

இதுதான் உலகமா?

இதுதான் வாழ்க்கையா? என்ற கேள்விக்கு பதில் சொல்வார் யாருமில்லை!

முன்னுக்குப்பின் முரணனானதாகவும், எதிரும் புதிருமான நிகழ்வுகள்தான் வாழ்க்கை!

அடுத்த நொடிகளில் நடக்க இருப்பது, அதிர்ச்சிகளா? ஆச்சரியங்களா? என அறியமுடியாமல் இருப்பதுதான் வாழ்க்கையின் சுவராஸ்யம்.

”வாழ்க்கையை புரிந்துகொள்ளமுடியாது. புரிய வைக்கவும் முடியாது. (எதிர் வருவதை) எது நடந்தாலும் ஏற்றுக்கொண்டு, முன்னேறுவதுதான் வாழ்க்கை”.

மூலம் — சுவாமி சுகபோதானந்தாவின்

“மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ்” லிருந்து

# பாக்கு நீரிணையை நீந்தி கடந்த ஈழத்தமிழன் ஆழிக்குமரன் ஆனந்தன்




ஒன்பது கின்னஸ் உலக சாதனை களைப் படைத்த சாத னையாளர் வல்வையின் விவேகானந்தன் செல்வ குமார் ஆனந்தன் - (ஆழிக்குமரன் ஆனந் தன்)

ஒரு நீச்சல் வீரர். பாக்குநீரிணையை நீந் திக் கடந்த வீரர் ஆவார். ஒன்பது உலக சாதனை களைப் படைத்து கின் னஸ் புத்தகத்தில் இடம் பெற்றவர்.

பாக்குநீரிணையை ஒரேதடவையில் நீந்திக்கடந்தார் ஆனந்தன். 1971 ஆம் ஆண்டில் மன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்தி, அங்கிருந்து மீண்டும் மன்னாரை நீந்திச் சாதனை படைத்தார். அப்போது வீரகேசரி ஆசிரியராக இருந்த எஸ்.டி.சிவநாயகம் இவருக்கு“ஆழிக்குமரன்“ என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்.

சிறுபிள்ளையிலேயே இவர் இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்டாலும், நீரில் மிதத்தல், மெதுநடை, தொடர்ந்து நடனம் என்று பல செயல்களில் சாதனைகளைப் படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றார்.

## ஆழிக்குமரன் ஆனந்தன் படைத்த கின்னஸ் சாதனைகள் பின்வருமாறு

1. 1971ஆம் ஆண்டில் பாக்கு நீரிணையை 51 மணி நேரத்தில் நீந்திக்கடந்தது.
2. 1978ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 128 மணி நேரம் Twist Dance (60 பதுகளில் பிரசித்திபெற்ற ஒரு வகை நடனம்) ஆடியது.
3. 1979 ஆம் ஆண்டில் 1487மைல் தூரத்தை 187 மணி நேரத்தில் இருசக்கர வாகனம் மூலம் இடைவிடாது ஓடி முடித்தமை.
4. 1979 ஆம் ஆண்டில் 33 மணி நேரம் ஒற்றைக் காலில் நின்றமை.
5. 1979 ஆம் ஆண்டில் 136 மணி நேரம் Ball Punching செய்தமை.
6. 1980 ஆம் ஆண்டில் 2 நிமிட நேரத்தில் 165 தடவைகள் குந்தி எழுந்தது (Sit-ups).
7. 1980 ஆம் ஆண்டில் 9100 தடவைகள் High Kicks செய்தமை.
8. 1981 ஆம் ஆண்டில் 296 மைல் தூரத்தை 159 மணி நேரத்தில் இடைவிடாது நடந்து கடந்தமை.
9. 1981 ஆம் ஆண்டில் 80 மணி நேரம் தொடர்ச்சியாக தண்ணீரில் (சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில்) செங்குத்தாக நின்றமை.

ஓர் ஈருந்து (மோட்டார் சைக்கிள்) விபத்தின் விளைவால் இவரது மண்ணீரலை அகற்ற நேரிட்டது. ஆயினும் அவர் மனம் தளரவில்லை. இதன் பின்னர் இவர் ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடக்கத் திட்டமிட்டு இங்கிலாந்து சென்றார்.

ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சியின்போது, 6 மணிநேர துணிகர முயற்சியின் பின், வலுவான சாதகமற்ற நீரோட்டத்தாலும், நீரின் குறைந்த வெப்ப நிலையாலும் பாதிக்கப்பட்டு சாதனை முயற்சியின் போதே மரணத்தையும் தழுவிக்கொண்டார்.


சாதனை முயற்சியின் போது "குளிர்ந்த கடலே கவலை தருகிறது, அதற்கேற்ப என்னை தயார் செய்ய கால அவகாசம் போதவில்லை" என்று தெரிவித்தார்.

இதுதான் அவர் 1984 ஆம் ஆண்டு ஆகஸ்டு 6 ஆம் தேதி ஆங்கிலக் கால்வாய்யை கடக்கும் முயற்சியின் போது இறக்கும் முன்னர் கூறிய கடைசி வார்த்தை.


ஆழிக்குமரன் ஆனந்தன் கின்னஸ் சாதனைகளைப் படைத்தது மட்டுமன்றி, லண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டதாரி பட்டத்தையும் இலங்கையில் சட்டமாணிப் பட்டத்தையும் பெற்று கல்வியிலும் சிறந்து விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆழிக்குமரன் ஆனந்தனின் சாதனைத்திறமைகளை கௌரவப் படுத்தும் முகமாக இலங்கை அரசாங்கம் இவரின் படம் பொறித்த ஒரு ரூபா முத்திரையினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சாதனைத் தமிழனை ஒரு முறை நினைத்துப் பார்ப்போம்.

# வாசகர் உள்ளத்திலிருந்து...


Forwarded
குருஷேத்திரம் June July
ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டது போன்று மனிதநேயம் அற்ற சமுதாயம் உருவாக்கிக்கொண்டு வருகின்றது. இளைஞர்களின் நடத்தை ஒரு வன்முறை கலாச்சாரமாக மாறிவருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.
18 பக்கங்களிலும் பல்வேறுபட்ட கருத்துக்களை உள்ளடக்கிய கட்டுரைகள் காணப்படுகின்றன. உணவு முறை, இணையம், தகவல் தொழில் நுட்பம், கணனி, போலாந்து நாட்டு பேட்ரெவ்ஸ்கியின் செயல், பாடசாலை கல்விமட்டுமல்ல வெளியுலக நட்பு, சமூக மயப்படல் என்பனவும் வாழ்க்கைக்கு மிக அவசியமாகும்.
சந்தர்ப்பத்துக்கு மிக்க நன்றி
6:45 PM

Sinnaiah Pathmanathan 7:46 PM




# பேசும் படங்கள் !




**- Degital Design By. G.Niruban –**
**Nuffield School for the Deaf and Blind, Kaithady**




**- P.Preminy- Jaffna NCoE -**




**- T.Kaviththira – English Cours -**